பொரலஸ்கமுவ நகர சபை - 2022

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொரலஸ்கமுவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள பொரலஸ்கமுவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1(ஆ) இன் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிலுள்ள இருப்பு ரூபா 7,836,728 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த வேறுபாட்டை அகற்றுவதற்கு உரிய நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. | கையிலுள்ள இருப்பை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னைய ஆண்டில் இருந்து கொண்டுவரப்படுகின்ற தொங்கல் கணக்கில் ரூபா 14,363,746 வரவு மீதி மற்றும் இனங்காணப்படாத ரூபா 224,217 வரவு மீதி என்பவற்றை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். | தொங்கல் கணக்கை தீர்த்து வைப்பதற்கும் இனங்காணப்படாத வரவு மீதியை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட கிரயம் ரூபா 36,243,159 ஆன வீதிகளுக்காக ரூபா 3,624,316 | - மேற்படி - | பெறுமானத் தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீள்மதிப்பீடு வருடத்தின் போது பெறுமானத் தேய்வு தேவையற்றிருந்த போதிலும், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு செய்தமையால் பெறுமானத் தேய்வுக் கணக்கு ரூபா 3,511,567 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து விடயங்களுக்கு உரிய 2022 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 18,906,466 பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கில் மீதி அகற்றப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (ஊ) | 02 கணக்குகளுக்குரிய ரூபா 4,544,247 ஆரம்ப மீதிகள் பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. இதனால் நிதிக் கூற்றுக்களின் சமப்படுத்தப்பட்ட முறையும் கணக்காய்விற்கு விளக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படாத வேலையாக காண்பிக்கப்பட்ட ரூபா 4,284,997 தொகை இந்த ஆண்டு வரையிலும் சகல வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக கடன்கொடுத்தோர் கொடுப்பனவின் கீழ் சேர்த்து காண்பிக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப மீதி சரியாக பதியப்படல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டணத்திற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு கட்டணம் மதிப்பீடு கிடைத்ததன் பின்னர் 2023 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஏ) | நகர அபிவிருத்தி அதிகார சபை கணக்கில் 04 சந்தர்ப்பங்களின் போது அனுப்ப வேண்டிய ரூபா 2,069,788 தொகை தவறாக பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சரியான அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர் இந்த தொகை நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | சபையின் பெறுமானத் தேய்வு கொள்கை சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் முழுவதும், குறைந்து செல்லும் மீதி முறைமையாக காண்பிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வு ஏற்பாடு ரூபா 14,769,737 பெறுமதி நேர்கோட்டு முறையில் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | பெறுமானத் தேய்வு கொள்கையின் பிரகாரம் பெறுமானத் தேய்வு செய்தல் வேண்டும். |
| (ஒ) | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முதலீட்டு வட்டி வருமானம் ஆன ரூபா 5,557,609 குறைக்கப்பட வேண்டிய போதிலும், அப்பெறுமதி மீளாய்வாண்டின் சீராக்கத்தின் போது சேர்க்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | ஆண்டின் தொழிற்படு மூலதன மாற்றங்களை சீராக்கும் போது பெறவேண்டியவைகளில் குறைத்தல் பெறுமதி ரூபா 8,180,037 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 38,826,705 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஔ) | ஆண்டின் செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு ரூபா 17,047,618 பெறுமதி ரூபா 5,530,349 ஆக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலில் சேர்க்கப்பட்டமையால் காசுப் பாய்ச்சல் ரூபா 11,517,269 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (க) | மீளாய்வாண்டின் போது கிடைத்த வட்டி வருமானம் ரூபா 3,942,296 ஆக இருந்த போதிலும், அது காசுப் பாயச்சலில் ரூபா 4,468,410 ஆக சீராக்கப்பட்டிருந்தது. | இந்த ரூபா 526,114 தொகை 2021 ஆம் ஆண்டிற்காக 2022 ஆம் ஆண்டில் கிடைத்த பணமாகும். | - மேற்படி - |
| (கா) | மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன செலவின மானியம் ரூபா 8,725,859 ஆக இருந்த போதிலும், அது ரூபா 30,933,446 ஆக காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (கி) | ஆண்டின் நீண்ட கால கடன் பெறலில் மீள் செலுத்துதல் ரூபா 1,866,000 பெறுமதி நிதி செயற்பாடுகளில் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சலின் போது குறைக்க வேண்டியிருந்த போதிலும், அப்பெறுமதி சேர்க்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதியில் அதற்குரிய பட்டோலைகள்/ அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 26,469,236 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பட்டோலைகளுடன் இணக்கம் செய்யப்படுவதுடன், தேவையான திருத்தங்களை செய்து கணக்குகளை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் மற்றும் பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகள் சமமாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆண்டின் ஆதன வரி வருமானம் ரூபா 27,964,577 ஆக இருக்க வேண்டிய போதிலும், விரிவான வருமானக் கூற்றில் ஆதன வரி வருமானமாக ரூபா 23,450,730 காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 4,513,847 வேறுபாடு காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் 02 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 377,401 மீதியை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | உரிய ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 49,306,547 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,913,815 ஆக இருந்தது.

2.2 **வருமான நிர்வாகம்**

2.2.1 **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா ’000 | ரூபா ’000 | ரூபா ’000 | ரூபா ’000 | ரூபா ’000 | ரூபா ’000 | ரூபா ’000 | ரூபா ’000 |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | **27,300** | **27,664** | **32,023** | **23,911** | **27,000** | **27,383** | **25,151** | **28,269** |
| **(ii)** | வாடகை | **990** | **990** | **1,012** | **371** | **990** | **990** | **1,000** | **370** |
| **(iii)** | அனுமதிப் பத்திரக் கட்டணம் | **750** | **238** | **238** | **-** | **700** | **225** | **225** | **-** |
| **(iv)** | ஏனைய வருமானம் | **1,250** | **1,149** | **1,149** | **-** | **1,150** | **909** | **909** | **179** |
| | மொத்தம் | **30,290** | **30,041** | **34,422** | **24,282** | **29,840** | **29,507** | **27,285** | **28,818** |

2.2.2 **வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) **வீதி வரியும் வரியும்** | | |
| (i) முன்னைய ஆண்டின் இறுதியில் ஆதன வரி கடன்பட்டோர் மீதி ரூபா 28,269,300 ஆக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 11,168,343 அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 17,100,957 அதாவது அறுபது (60%) சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் ஆதனங்கள் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கும், முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் நிலைமையினால் முடியாதிருந்தது. தற்போது காணப்படுகின்ற நிலுவையில் 12 சதவீத அளவு அறவிடப்பட்டுள்ளது. மிகுதி நிலுவையை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் சீடீ.2/3/101 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு ஆதன வரி அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையினால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 மே 02 ஆம் திகதி முதல் மீண்டும் ஆதனங்களை மதிப்பிடும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக தயார் நிலையில் உள்ளது. | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனங்கள் மதிப்பீடு செய்து ஆதன வரி அறவிடப்படல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட 05 ஆதனங்களில் இருந்து ரூபா 1,125,199 தொகையும், ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடையில் 05 ஆதனங்களில் இருந்து ரூபா 1,080,727 தொகையும் நிலுவையாக காணப்பட்டது. | இவ்வாறு காணப்படுகின்ற நிலுவையான இடங்கள் சிலவற்றில் சில இடங்கள் மூடப்பட்டிருந்ததுடன். வீதி நடவடிக்கைகளின் போது அகற்றப்பட்ட ஆதனங்களாகும். ஏனையவை காணப்படுகின்ற ஆதனங்களில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| (i) | கடை வாடகை உடன்படிக்கை நிபந்தனை 02 இன் பிரகாரம் வாடகை செலுத்துதல் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் தாமதமாக இருக்குமாயின் உரித்து இழக்கப்படுவதாக காண்பிக்கப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 மாதம் முதல் 24 மாதங்கள் வரையான கால வீச்சில் 19 கடைகளில் நிலுவையாக இருந்த கடை வாடகை வருமானம் ரூபா 271,264 ஆகும். | கையேற்றல் அல்லது மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்காக வாடகையாளரை கண்டறிவதற்கு முடிாமையினால் இது வரையில் இலக்கம் 27 என்ற கடையை வாடகைக்கு வழங்க முடியாதிருந்தது, வாடனை உரிமையாளருக்கு அறிவித்து நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை பணத்தை அறவீடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியில் இருந்து மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மாதாந்த வாடகை மீள்திருத்தம் செய்ய வேண்டிய போதிலும், 48 கடைகளின் உடன்படிக்கை புதுப்பிக்காமல் 2022 ஆம் ஆண்டின் போதும் 2009 இன் மதிப்பீட்டின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது. | 2023 மே மாதம் முதல் மதிப்பீட்டு நடவடிக்களை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளயைமால், அதன்பின்னர் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 03 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனங்களை மதிப்பீடு செய்து வாடகை திருத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) **வியாபார அனுமதிப் பத்திர கட்டணம்**<br>2022 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட அனுமதிப் பத்திர வருமானம் ரூபா 750,000 ஆக இருந்ததுடன், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 237,531 ஆகும். அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 31 சதவீதம் மாத்திரம் ஆகும். | 2023 ஆம் ஆண்டில் ஆர்.ஓ உத்தியோகத்தர்கள் மூலம் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வியாபார அனுமதிப் பத்திர கட்டண வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்களிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| உக்கும் கழிவுகளை விற்பனை செய்வதற்கோ அல்லது கூட்டுப் பசளை செயற்திட்டத்தின் மூலம் பசளை உற்பத்தி செய்வதற்கு மற்றும் உக்காத கழிவுகளை விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதன் மூலம் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக ஏற்படுகின்ற செலவினத்தை குறைக்கக் கூடியதாக இருந்தது. | கூட்டுப்பசளை செயற்திட்டத்தை ஆரம்பித்து பொருத்தமான காணியொன்றை கண்டறிவதற்கு பல தடவைகள் முயற்சிக்கப்பட்ட போதும், அதிக சன நெரிசலான இந்த பிரதேசத்தில் அவ்வாறான இடமொன்றை கண்டறிவதற்கு முடியாதிருந்ததுடன், எதிர்காலத்தில் அவ்வாறான காணியொன்றை பெற்றுக் கொள்வதற்கு நிலையான சொத்து குழுவின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கழிவுப் பொருள் செலவினத்தை குறைக்கும் நோக்கில் கழிவுப் பொருட்களிடம் இருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 02 செயற்திட்டங்களுக்காக ரூபா 42,172 தொகை கெஸ்பாவ பிரதேச செயலகத்திலும், கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் | இந்த பணம் தற்போது மீளழிப்பு செய்யப்படாதிருந்ததுடன், மீளழிப்பு செய்ததன் பின்னர் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதி மீளளிப்பு செய்து உரிய நிறுவனத்திற்கு செலுத்துதல் வேண்டும். |

கீழ் அமுல்படுத்தப்பட்ட 26 செயற்திட்டங்களுக்காக ரூபா 10,701,222 தொகை கிராமிய வீதி உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுக்கும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 10,743,394 தொகை சபையினால் அறவிடப்பட்டு உரிய நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட 29 ஆதனங்களில் 20 இற்குரிய உரித்துறுதிப்படுத்துவதற்கோ அல்லது உரிய உரித்துரிதியை கையளித்தல் கட்டளையோ காணப்படவில்லை. | தற்போது உரித்துறுதி மூலம் உரித்தை உறுதிப்படுத்தியுள்ள காணிகள் தவிர ஏனைய ஆதனங்களின் உரித்தை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |